**Sakthi foundation**

**Parenting at home situation**

வீட்டில் உள்ளவர்கள் அனைவருடனும் பழக வாய்ப்புத் தருக.

குறிப்பாக வீட்டில் உள்ள பெரியவர்களை மதிக்கக் கற்றுத் தருக.

பெரியவர்களுடனும் கணவன் - மனைவியுடனுமான சண்டை சச்சரவுகளைக் குழந்தைகள் முன் தவிர்த்திடுக.

கோபத்தையும் தேவையற்ற உணர்ச்சிகளையும் வாய் வார்த்தைகளையும் குழந்தைகள் முன் தவிர்க்க வேண்டும்.

சில ஆண்கள் எதற்கெடுத்தாலும் மனைவியை அடிக்கக் கை ஓங்குவதைக் குழந்தைகள் முன் தவிர்க்க வேண்டும்.

மிக அந்தரங்க அன்பையும் தம்பதிகள் குழந்தைகள் முன் ”ரொமான்ஸ்” என்ற பேரில் வெளிப்படுத்தாதீர்கள்.

உறவுகளைப் பற்றிய நல்ல தரமான தகவல்களைக் குழந்தைக்கு எடுத்துக் கூறி அறிமுகம் செய்க.

தேவைற்ற மனிதர்கள், ஆபத்து பற்றி எச்சரிக்கையுடன் இருந்திடுக.

எதெற்கெடுத்தாலும் உங்கள் கையாலாகாத்தனத்துக்குப் பிறரையோ, இல்லாத ஒரு பொருளைளை, மனிதரையோ, ஆசிரியரையோ காட்டிக் குழந்தையை பயப்படுத்தக் கூடாது.

எதெற்கெடுத்தாலும் தாஜா பண்ணி, ”இதை வாங்கித் தருவேன்” என்று லஞ்சம் தரும் பழக்கம் மிக மிகத் தீமையையே பின்னர் உண்டாக்கும்.

குழந்தைக்குத் தேவையான எல்லாவற்றையும் வாங்கிக் கொடுங்கள், ஆனால் அதில் அளவு வேண்டும்.அளவுக்கு அதிகமான chioce குழப்பத்தையே உண்டாக்கும்.

குழந்தையின் வயதுக்கும் பக்குவத்துக்கும் ஏற்றபடி நாமும் பேச வேண்டும், பழக

வேண்டும், கருத்துக்கள் கூற வேண்டும்.

எந்தெந்த விஷயங்களில் குழந்தைகளை நம்முடன் இணைத்துக் கொண்டு செயல்பட முடியுமோ அதை ஊக்குவிய்யுங்கள்.

ஒரே குழந்தை என்பதற்காக over செல்லம் தரக் கூடாது, கேட்டதைக் கேட்டபோது வாங்கித் தரக்கூடாது.பிறரைக் கீழ்த்தரமாகப் பேச எண்ண பழக்கக் கூடாது.

உங்கள் குழந்தை உங்கள் வீட்டிலோ குடும்பத்திலோ ஒரு தேவதை ஆக இருக்கட்டும்.அதே போல் தான் ஒவ்வொரு வீட்டிலும் என்பதை மறக்கக் கூடாது.குறிப்பாகப் பள்ளியிலும் பொது இடங்களிலும் நாம் அனைவரும் சமம் தான்.

பிற குழந்தைகளுடன் இணைந்து பழகும் வாய்ப்பை, காலத்தினைத் தருக.தேவையற்ற குற்றச்சாட்டுகளுக்குக் காது கொடுக்க வேண்டாம்.குழந்தைகளுக்கு மனதில் கல்மிஷத்தை விதைக்க வேண்டாம்.

யாரைப் பற்றியும் தேவையற்ற செய்தியையோ, குறையையோ, negative எண்ணத்தையோ உண்டாக்க வேண்டாம்.

”நீ அம்மா பிள்ளையா? அப்பா பிள்ளையா?” போன்ற தேவையற்ற பேச்சுக்கள் கூடாது.

ஒருவர் குழந்தையைக் கண்டிக்கும் போது மற்றவர் தடுக்காதீர்.

சில சமயம் செய்யாத தவறுக்குக் கண்டிக்க நேரின் மன்னிப்புக் கேட்பதில் ego வேண்டாம்.

பேச்சாலோ செய்கையாலோ ஒரு போது வன்முறையைப் பயன்படுத்தக் கூடாது.

கண்டித்த பின் அதற்குரிய காரணத்தைக் கூறுக.

முடிந்த வரை குழந்தைக்குத் தேவையானதைச் செய்யாமல் இருப்பதே மிகக் கொடிய தண்டனை.

”சூடு வைப்பேன், அப்பாவிடம் சொல்வேன், ஆசிரியரிடம் புகார் தருவேன்,

அறைக்குள் மூடுவேன், பூச்சாண்டியிடம் கொடுப்பேன்"  - இவற்றைத் தவிர்த்திடுக.

இதைச் செய்தால் இப்படி எல்லாம் நடக்கும் என்று விளைவுகளை விளக்குக.அதற்கு நமக்கு மிகவும் பொறுமை தேவை.

குழந்தையின் தவறுகளைப் பிறர் முன் கூறி அவமானம் செய்யாதீர்.

தனியாக அழைத்துக் கண்டிக்கும் பக்குவம் நமக்கு வேண்டும்.

அதே சமயம் சில தவறுகளை அனைவர் முன் கண்டிக்கும் சமயமும் வரும்.

யாரை வைத்தும் குழந்தையை அவமானம் செய்யாதீர்.

அதே வேளை குழந்தை செய்யும் தவறுகளைக் கண்டிக்காமல் அதன் வீரதீரம் என்று பாராட்டுவதோ பயங்கரப் பின் விளைவை ஏற்படுத்தும்.

"உன் ப்ரச்சனைக்கு நீ தான் முதல் காரணம்" என்று உணர வைக்க முயற்சி செய்க.

"இதைத் தொடாதே, இதைச் செய்யாதே" என்று கூறுவதற்கு பதில், "இதை எப்படிச் செய்வது எனக் காட்டுகிறேன்" என்று பயிற்சி தருக.

குழந்தையின் திறமைகளை ஊக்குவிய்யுங்கள்.பிற குழந்தைகளுடன் ஒப்பிட்டு ஏற்றத் தாழ்வு காட்டாதீர்.

மதிப்பெண்களை வைத்துக் குழந்தையை எடை போடாதீர்.

எவ்விதமானத் திறமை இருப்பினும் அதைப் பாராட்டுங்கள்.ஆனால் "நீ தான் சிறந்தவன்" என்ற ego ஏற்படுத்தக் கூடாது.

வெற்றியையும் தோல்வியையும் ஏற்றுக் கொள்ளப் பயிற்சி தருக.

தோல்வியை நாம் முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கூட்டத்தில் குழந்தையைத் தரம் தாழ்த்திப் பேசாதீர், அதே வேளை ஒரேடியாக உங்கள் குழந்தை மட்டுமே உயர்ந்தது என்றும் கூறாதீர்.

வீட்டில் நிகழும் அனைத்து விஷயங்களும் குழந்தைக்குத் தெரிய வேண்டும் என்பதே இல்லை.அவர்களை mature ஆக்குகிறேன் என்ற பெயரில் அவர்களுக்குத் தேவையற்ற தகவல்கள் தருவதைத் தவிர்த்திடுக.

அதே வேளை முக்கியமான தகவல்கள் அவர்களுக்குத் தெரிய வேண்டும்.

வெளியே செல்லவோ, புதிய விருந்தினர் வருவதோ அவர்களுக்குத் தெரிய வேண்டும்.

அவர்களின் மாற்றங்களுக்குக் காலம் தருக.

உங்கள் அவசரத்துக்கு அவர்கள் மாறுவார்கள் என்று எதிர்பார்த்தல் தவறு.

பொது இடங்களில் தனித்து இயங்கப் பயிற்சி தருக.

எதற்கு எடுத்தாலும் அழும் குணத்தை ஊக்குவிக்க வேண்டாம்.

செய தவறுகளை தைரியமாக உங்களிடம் கூறும் மனப்பக்குவம் அவர்களுக்கு வளர வேண்டும்.

தவற்றைத் திருத்திக் கொள்ளும் பக்குவத்தை வளர்த்தல் அவசியம்.

உங்களிடம் தனியாகப் பேசவும், சில செய்திகளை ரஹஸ்யமாகக் கூறவும் கற்றுத் தருக.

பிறப்பு முதல் மூன்று வயது வரைக் குழந்தையின் மனம் ஒரு கேமரா போல நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் கண்காணித்துக் கொண்டே வருகிறது என்பதைக் கருத்தில் கொள்க.

ஆறு வயது வரை நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்களோ அப்படித் தான் குழந்தையும் வளரும்.இது இயற்கை உண்மை!

வாழ்த்துக்கள்!